கலைஞர் அவர்கள்தான் இதற்கும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பயிர்ப் பாதுகாப்பிற்கு, பயிர்களுக்கு இழப்பீடாக, சென்ற ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) என்ன? திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பிலே ஒரே ஒரு வரியில் கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இப்போதும் யானைகள் சோலையாறு பகுதியில் இருப்பதால் கும்கி யானைகளை அங்கே நிரந்தரமாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரும் நிதியாண்டில் மின் வேலிக்கு வால்பாறையில் கூடுதலாக நிதியொதுக்கி அதிகமான தூரத்திற்கு மின் வேலி போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஈ) மேட்டூர் அணையின் உபரிநீர் கடலில் கலப்பதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) என்ன திரு. மணி சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. அதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பாசனத்தில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாக இருந்து வருகிறது. நமக்கு ஒரு பக்கம் ஆந்திர அரசு பாலாற்றில் அணை கட்டி நம்முடைய பங்கை எடுத்துக்கொள்கிறது. கர்நாடக மாநிலம் தொடர்ந்து நம்முடைய உரிமையை மறுத்து வருகிறது. கேரள அரசு முல்லைப்பெரியாற்றின் அணை உயரத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்குத் தடையாக இருந்து வருகிறது. இப்படி சுற்றிலும் தடையாக இருந்து

2007 அக்டோபர் 22] [திரு. ஜி.கே. மணி]

வருகிற வேளையில் நாம் இருக்கிற தண்ணீரையாவது முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். உதாரணத்திற்கு இப்போது காவிரி மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பு 205 டி.எம்.சி., இறுதித் தீர்ப்பு 192 டி.எம்.சி. வித்தியாசம் 13 டி.எம்.சி. தான். பாலாற்றிலே குப்பத்தில் அணை கட்டுவதனாலே நமக்கு ஒரு டி.எம்.சி. தண்ணீர் குறைவு. முல்லைப் பெரியாற்றிலே 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தினால் 1½ டி.எம்.சி. தண்ணீர்தான் கூடுதலாகத் தேக்கி வைக்க முடியும். ஆக, இப்படிப் பார்த்தால் ஒட்டுமொத்தமாக, 15 டி.எம்.சி. தண்ணீருக்காக நாம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஆனால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முதலில் இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார்களா என்று தெரிந்துகொண்டுதான் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்டால் எப்படி?

**திரு. ஜி.கே. மணி:** சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினையில் மழைக் காலங்களிலே நீர் வரத்து அதிகரித்து மேட்டூர் அணை நிரம்பி வழிகிறது. இந்த ஆண்டு மட்டும் மேட்டூர் அணை 6 முறை நிரம்பி, நிறைய நீர் வீணாகக் கடலில் கலந்திருக்கிறது. உதாரணத்திற்கு 2005 ஆம் ஆண்டு எடுத்துக்கொண்டால் 142.569 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்றிருக்கிறது. அதைப்போல 2006 ஆம் ஆண்டில் 6.12 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்றிருக்கிறது. இந்த ஆண்டு ஏறக்குறைய 67.15 டி.எம்.சி. தண்ணீர் வீணாகச் சென்றிருக்கிறது. ஆகவே, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது, இப்படி மேட்டூர் அணையிலிருந்து வீணாகச் செல்லக்கூடிய தண்ணீரை, கடலில் கலக்கக்கூடிய தண்ணீரை, நாம் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான். சேலம் மாவட்டம், மேட்டூர் அணையை உள்ளடக்கி இருக்கிற மாவட்டம். அது பாசன வசதி இல்லாத மாவட்டம். ஆகவே, மேட்டூர் அணையின் உபரி நீரை சேலம் மாவட்டம் முழுவதும் பயன்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் 150 ஏரிகள் இருக்கின்றன. இன்னும் கூடுதலாக புதிய ஏரிகளை உருவாக்கலாம். ஆக, குறைந்த செலவுத் திட்டத்திலே, சேலம் மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய

வகையிலே இந்த உபரி நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தை அரசு நடப்பு ஆண்டிலே நிறைவேற்றுமா, அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாலும், எனக்கு ஞாபகத்தில் இருப்பதை நான் தெரிவிக்கிறேன். முதலில் காவிரியிலே மழைக் காலங்களில் மிகையாக ஓடி வருகின்ற நீர் கடலிலே கலக்கிறது, எந்தெந்த ஆண்டு எவ்வளவு கலக்கிறது என்று புள்ளிவிவரங்களைச் சொன்னார். இந்த அரசு அந்தப் புள்ளிவிவரத்தை அறியும். ஆனால், எவ்வளவுதான் தண்ணீர் கடலிலே கலந்தாலும் அதை ஒன்றும் செய்ய முடியாது. காரணம், காவிரியினுடைய வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் தண்ணீரை நீங்கள் எங்காவது கட்டித் தடுத்தால் அதைக் கர்நாடகம் objection செய்யும். இன்னும்கூட இப்போது சொல்கிறேன்; நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட தலைவர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்; இந்த அரசு தெரிவித்திருந்தது. இராமநாதபுரத்திற்குக் குடி தண்ணீருக்காக எடுத்துக்கொண்டு போகிறோம் என்று சொன்னோம். ஆனால், இப்போது அதற்கே கர்நாடக அரசு என்ன கடிதம் எழுதியிருக்கிறது தெரியுமா? இன்னும் 1924 ஆம் ஆண்டு agreement நடைமுறையில் இருக்கிறது. காரணம், நடுவர் மன்றம் தீர்ப்பு கொடுத்தது; தீர்ப்பின் மீது நாம் மறுபடியும் விளக்கம் கேட்டிருக்கிறோம். Notification வந்த பிறகுதான், 1924 ஆம் ஆண்டு agreement காலாவதி ஆகுமே தவிர, அதுவரையில் அது இருக்கும் என்றுதான் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, ஆக, இன்றைக்குப் பார்த்தாலும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறது, நடைமுறையிலே இருக்கிற காலத்தில் எங்களைக் கேட்காமல் நீங்கள் எதையும் கட்டக்கூடாது, ஆகவே, நீங்கள் எடுத்தது எப்படி என்று கடிதம் எழுதியிருக்கிறது. ஆனால், தண்ணீரை எப்படியாவது வறண்ட பகுதிக்குக் கொண்டுபோக வேண்டும் என்பதற்காகத்தான் முதல்வர் அவர்கள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதிலே பெரும் பகுதி என்ன என்று கேட்டால்—இன்னும் கொஞ்சம் நான் விளக்கமாகச் சொல்வேன், ஆனால் சொல்லக்கூடாது. சொன்னால், இன்னும் அது கர்நாடகத்திற்குச் சாதகமாகப் போய்

முடியும். ஆனால், தீர்ப்பு ஒன்று இறுதியான நிலைக்கு வந்த பிறகுதான், இதற்குத் திட்டவட்டமான முடிவுகளை எந்த அரசாக இருந்தாலும் எடுக்க முடியும். அதற்கிடையில் என்ன செய்வது என்பதில், சில விஷயங்களில் இந்த அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை நான் விளக்கமாக இந்த அவையில் நாட்டு நலனைக் கருதிச் சொல்லக்கூடாது.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். உட்காருங்கள் முதலில். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து இரண்டாவது முதல் அறுபத்து ஏழாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது முதல் பன்னிரண்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2007–2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பத்தொன்பதாவது முதல் இருபத்து நான்காவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.